# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.02.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்)

***1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 51.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்"எனக் குறிப்பீடுசெய்யப்படும்) *1968* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திச் சட்டத்தின் *2*அ என்னும் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இப்பிரிவின்கீழ் தவறொன்று புரியப்படுமிடத்து சுருக்க முறையான விளக்கமொன்றில் நீதிவானொருவரால் குற்றப்பணம் ஒன்றையும் மறியற்றண்டனைக் காலம் ஒன்றையும் விதித்துரைப்பதற்கும் அத்துடன் இப்பிரிவின் ஏற்பாடுகளைமீறும் பட்சத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை முறையைஎடுத்துக்கூறுவதற்கும் ஆகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *2*ஆ என்னும் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இப்பிரிவின்கீழ் தவறொன்று புரியப்படுமிடத்து சுருக்கமுறையான விளக்கமொன்றில் நீதிவானொருவரால் குற்றப்பணம் ஒன்றையும் மற்றும் மறியற்றண்டனைக் காலம் ஒன்றையும் விதித்துரைப்பதற்கும் அத்துடன் இப்பிரிவின் ஏற்பாடு களை மீறும்பட்சத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை முறையை எடுத்துக்கூறுவதற்கும் ஆகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *4*அ என்னும் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இப்பிரிவின்கீழ் தவறொன்று புரியப்படுமிடத்து சுருக்கமுறையான விளக்கமொன்றில் நீதிவானொருவரால் குற்றப்பணம் ஒன்றையும் மற்றும் மறியற்றண்டனைக் காலம் ஒன்றையும் விதித்துரைப்பதற்கும் அத்துடன் இப்பிரிவின் ஏற்பாடு களை மீறும்பட்சத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை முறையை எடுத்துக்கூறுவதற்கும் ஆகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *6* ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கூட்டுத்தாபனத்தின் இரண்டு பதவிவழி உறுப்பினர் களை பிரதியீடு செய்வதற்குமாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *9* ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களை உயர்த்து வதற்குமாகும்

***வாசகம் 7*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *20*அ என்னும் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தடுத்தற் கட்டளை ஒன்றைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான நடவடிக்கை முறையை எடுத்துக்கூறுவதற்குமாகும்

***வாசகம் 8*** : இவ்வாசகம், பொலிசு அலுவலர் ஒருவரால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை களுக்கும் அத்துடன் ஆட்கள் குழுவொன்றினால் அல்லது பங்குடைமை ஒன்றினால் புரியப்பட்ட தவறுகளுக்கும் ஏற்பாடுசெய்வதற்காக இரண்டு பிரிவுகளை அறிமுகப்படுத்துகின்றது.

***வாசகம் 9*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *22*அ என்னும் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தண்டம் எதுவும் ஏற்பாடு செய்யப்படாதவிடத்து நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்திற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்

***வாசகம் 10*** : இவ்வாசகம், புதிய வரைவிலக்கணங்களுக்கு ஏற்பாடு செய்யும்பொருட்டு முதன்மைச் சட்டவாக்கத்தின் *28* ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

***வாசகம் 11*** : இவ்வாசகம், நடவடிக்கைகள் முதலியனவற்றின் தொடர்ச்சிக்கு திருத்தத்தின் பின்னரும்கூட தொடர்ந்து முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் ஏற்பாடுசெய்கின்றது.

**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்**
**(திருத்தம்)**

ச.வ.ஓ. 11/2012

**1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 2அ என்னும் பிரிவினைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 2அ இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், ''இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவிற்கு குறையாததும் அத்துடன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஒரு வருடத்தை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் ''எவரேனும் ஆள்'' என்னும் சொற்கள் மற்றும் இலக்கங்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள சொற்கள் மற்றும் இலக்கங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டு அதற்குப்

பதிலாக, "எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றாரெனக் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அறிவிக்கப்படுகின்றவிடத்து அவர் சட்டவிரோதச் செயற்பாட்டைக்கொண்டு நடாத்துவதிலிருந்து, அத்தகைய ஆளைத் தடுப்பதற்கான தோதான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்தல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "சார்த்தப்பட்ட சட்டவிரோதச் செயற்பாடு" என்னும் சொற்கள் மற்றும் இலக்கங்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள சொற்கள் மற்றும் இலக்கங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும்:-

"பிரதான நிறைவேற்று அலுவலர் -

(அ) அத்தகைய சட்டவிரோதச் செயற்பாடு கொண்டுநடாத்தப்படும் அத்தகைய காணிப் பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்துக்குள்ளாக அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு பின்வருவனவற்றுக்காக கட்டளை ஒன்றை வழங்குவதற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் -

(i) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுவதிலிருந்து அத்தகைய ஆளை அவரது முகவர்களை மற்றும் சேவையாளர்களை தடுப்பதற்காகவும்;

(ii) (அஅ) அத்தகைய காணிப் பரப்பளவில் முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாக வாயினுஞ்சரி நிறுவப்பட்டிருக்கக்

கூடியவாறான ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்தளிப்ப தற்கும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிரு மாணிப்பதில் பயன்படுத்தப் படும் மண் மற்றும் மூலப் பொருட்களை அகழ்வதற்கும் அல்லது தோண்டி எடுப்ப தற்கும் அல்லது அகற்றுவதற் கும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புதலுக்கு அல்லது நிருமாணித்தலுக்கு பயன்படுத்தப்படும் ஏதேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதற்கும்.

ஆன அதிகாரத்தை பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்குவதற்கும்; அத்துடன்

(iii) (அஅ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதிலும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிரு மாணிப்பதில் பயன்படுத்தப் படும் மண் மற்றும் மூலப் பொருட்களை அகழ்வதிலும் அல்லது தோண்டி எடுப்ப திலும் மற்றும் அகற்றுவதிலும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பவற்றை கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதிலும்

கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட மொத்தச் செலவினை அறவிடுவதற்கும்; அல்லது

(ஆ) அத்தகைய சட்ட விரோத செயற்பாடு எந்த அத்தகைய காணிப்பரப்பில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அல்லது முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறைவேற்றப்படுகின்றதோ அந்தக் காணி இடப்பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் அமைந்துள்ள இடப்பரப்பின் பொலிஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு முறைப்பாட்டை செய்யலாம்.

(4) அப்பிரிவின் (6) (7) மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:-

''(6) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய அங்கீகாரம் எந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக வழங்கப்பட்டதோ அந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர்

அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட நேரத்தினுள் அத்தகைய ஆளை அதற்கு இணங்கியொழுகுமாறு பணித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள், அவ்வாறு செய்வதற்கு தவறுகின்றவிடத்து, பிரதான நிறைவேற்று அலுவலர்-

(அ) அத்தகைய சட்டவிரோதச் செயற்பாடு கொண்டுநடாத்தப்படும் காணிப்பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்துக் குள்ளாக அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு பின்வருவனவற்றுக்காக கட்டளை ஒன்றை வழங்குவதற்காக விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் –

(i) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடு களின்கீழ் விதிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளைமீறிச் செயலாற்று வதிலிருந்து அத்தகைய ஆளை, அவரது முகவர்களை மற்றும் சேவையாளர்களை தடுப்பதற்காகவும்;

(ii) (அஅ) அத்தகைய காணிப் பரப்பளவில் முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறுவப் பட்டிருக்கக் கூடியவாறான ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்தளிப்ப தற்கும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப் படும் மண் மற்றும் மூலப்பொருட் களை அகழ்வதற்கும் அல்லது தோண்டி எடுப்பதற்கும் அல்லது அகற்றுவதற்கும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புதலுக்கு அல்லது நிருமாணத்துக்கு பயன் படுத்தப்படும் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதற்கும்

ஆன அதிகாரத்தை பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்குவதற்கும்; அத்துடன்

(iii) (அஅ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதிலும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிரு மாணிப்பதில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதிலும் அல்லது தோண்டி எடுப்பதிலும் மற்றும் அகற்றுவதிலும்; அத்துடன்

(அஇ) கட்டுக்காப்பிலுள்ள அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத் தப்படும் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பவற்றை எடுத்துக் கொள்வதிலும்

கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட மொத்தச் செலவினை அறவிடுவதற்கும்; அல்லது

(ஆ) அத்தகைய சட்ட விரோத செயற்பாடு எந்த அத்தகைய காணிப்பரப்பில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அல்லது முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறைவேற்றப்படுகின்றதோ அந்தக் காணி இடப்பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் அமைந்துள்ள இடப்பரப்பின் பொலிஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு முறைப்பாட்டை செய்யலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவிற்கு குறையாததும் அத்துடன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஒரு வருடத்தை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (5), (6) மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளினை நீக்கிவிட்டு அத்துடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:-

“(5) எவரேனும் ஆள் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்றார் என பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அறிவிக்கப்படுமிடத்து அத்துடன் அவ்வாறு அவர் திருப்திப்படுவதன்மீதும், பிரதான நிறைவேற்று அலுவலர் -

(அ) அத்தகைய சட்டவிரோதச் செயற்பாடு கொண்டுநடாத்தப்படும் காணிப்பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்துக்குள்ளாக அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு பின்வருவனவற்றுக்காக கட்டளை ஒன்றை வழங்குவதற்காக விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் -

(i) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுவதிலிருந்து அத்தகைய ஆளை, அவரது முகவர்களை மற்றும் சேவையாளர்களை தடுப்பதற்காகவும்;

(ii) (அஅ) அத்தகைய காணிப் பரப்பளவில் முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறுவப்பட்டிருக்கக்கூடியவாறான ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்தளிப்பதற்கும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதற்கும் அல்லது தோண்டி எடுப்பதற்கும் அல்லது அகற்றுவதற்கும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புதலுக்கு அல்லது நிருமாணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதற்கும்

ஆன அதிகாரத்தை பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்குவதற்கும்; அத்துடன்

(iii) (அஅ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதிலும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப் படும் மண் மற்றும் மூலப் பொருட்களை அகழ்வதிலும் அல்லது தோண்டி எடுப்பதிலும் மற்றும் அகற்றுவதிலும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பவற்றை கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதிலும்

கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட மொத்தச் செலவினை அறவிடுவதற்கும்; அல்லது

(ஆ) அத்தகைய சட்ட விரோத செயற்பாடு எந்த அத்தகைய காணிப்பரப்பில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் கொண்டு நடாத்தப்படு கின்றதோ அல்லது முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறைவேற்றப் படுகின்றதோ அந்தக் காணி இடப்பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் அமைந்துள்ள இடப்பரப்பின் பொலிஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு முறைப்பாட்டை செய்யலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 அ என்னும் பிரிவினைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 அ என்னும் பிரிவானது அதன் (3), (4), (5), (6) மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவிற்கு குறையாததும் அத்துடன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஒருவருடத்தை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) எவரேனும் ஆள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்றார் என பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அறிவிக்கப்படுமிடத்தும் அத்துடன் அவர் திருப்திப்படுவதன் மீதும், பிரதான நிறைவேற்று அலுவலர்.

(அ) அத்தகைய சட்டவிரோதச் செயற்பாடு கொண்டு நடாத்தப்படும் காணிப்பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்துக்குள்ளாக அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு பின்வருவனவற்றுக்காக கட்டளை ஒன்றை வழங்குவதற்காக விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் –

(i) இரண்டாம் உட்பிரிவின் ஏற்றாடுகளை மீறிச் செயலாற்றுவதிலிருந்து அத்தகைய ஆளை, அவரது முகவர்களை மற்றும் சேவையாளர்களை தடுப்பதற்காகவும்;

(ii) (அ) அத்தகைய காணிப் பரப்பளவில் முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறுவப் பட்டிருக்கக்கூடியவாறான ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்தளிப் பதிலும்;

(ஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப் படும் மண் மற்றும் மூலப்பொருட் களை அகழ்வதிலும் அல்லது தோண்டி எடுப்பதிலும் அல்லது அகற்றுவதிலும்; அத்துடன்

(இ) அத்தகைய நிரப்புதலுக்கு அல்லது நிருமாணத்திற்கு பயன்படுத்தப்படும் ஏதேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதிலும்

ஆன அதிகாரத்தை பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்குவதற்கும்; அத்துடன்

(iii) (அ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதிலும்;

(ஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப் படும் மண் மற்றும் மூலப்பொருட் களை அகழ்வதிலும் அல்லது தோண்டி எடுப்பதிலும் மற்றும் அகற்றுவதிலும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பவற்றைக் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதிலும்

கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட மொத்தச் செலவினை அறவிடுவதற்கும்; அல்லது

(ஆ) அத்தகைய சட்ட விரோத செயற்பாடு எந்த அத்தகைய காணிப்பரப்பில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் கொண்டு நடாத்தப்படு கின்றதோ அல்லது முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறைவேற்றப் படுகின்றதோ அந்தக் காணி இடப்பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் அமைந்துள்ள இடப்பரப்பின் பொலிஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு முறைப்பாட்டை செய்யலாம்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய அங்கீகாரம் எந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக வழங்கப்பட்டதோ அந்த நியதிகளுக்கும் நிபந்தனை களுக்கும் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட நேரத்தினுள் அத்தகைய ஆளை அதற்கு இணங்கியொழுகுமாறு பணித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள், அவ்வாறு செய்வதற்கு தவறுகின்றவிடத்து, பிரதான நிறைவேற்று அலுவலர்-

(அ) அத்தகைய சட்டவிரோதச் செயற்பாடு கொண்டுநடாத்தப்படும் காணிப்பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்துக்குள்ளாக அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு பின்வருவனவற்றுக்காக கட்டளை ஒன்றை வழங்குவதற்காக விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் -

(i) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் விதிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறிச் செயலாற்றுவதிலிருந்து அத்தகைய ஆளை, அவரது முகவர்களை மற்றும் சேவையாளர்களை தடுப்பதற்காகவும்;

(ii) (அஅ) அத்தகைய காணிப் பரப்பளவில் முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ் சரி நிறுவப்பட்டிருக்கக்கூடியவாறான ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்தளிப்பதற்கும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதற்கும் அல்லது தோண்டி எடுப்பதற்கும் அல்லது அகற்றுவதற்கும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் கருவி, சாதனம், இயந்திரத்

தொகுதி, வாகனம் அல்லது ஆவணத்தைக் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதற்கும்.

ஆன அதிகாரத்தை பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்குவதற்கும்; அத்துடன்

(iii) (அஅ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதிலும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதிலும் அல்லது தோண்டி எடுப்பதிலும் மற்றும் அகற்றுவதிலும்; அத்துடன்

(அஇ) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பவற்றை கட்டுக் காப்பில் எடுத்துக் கொள்வதிலும்

கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட மொத்தச் செலவினை அறவிடுவதற்கும்; அல்லது

(ஆ) அத்தகைய சட்ட விரோத செயற்பாடு எந்த அத்தகைய காணிப்பரப்பில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அல்லது முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறைவேற்றப்படுகின்றதோ அந்தக் காணி இடப்பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் அமைந்துள்ள இடப்பரப்பின் பொலிஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு முறைப்பாட்டை செய்யலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) மற்றும் (iii) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ii) அமைச்சரின் அமைச்சின் மேலதிக செயலாளர்; அத்துடன்

(iii) (269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடலின் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(உஅ) கூட்டுத்தாபனத்தின் தேர்ச்சிபெற்ற தொழிலாளர், நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் மற்றும் வேறு எழுத்திலான சட்டத்திற்கிணங்கவும், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நேரடியாக வெளிநாட்டு அல்லது உள்ளூர் கம்பெனிகள் அல்லது தனியாட்களுடன் கூட்டுமுயற்சி, பங்காண்மை அல்லது வேறு வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 அ என்னும் பிரிவினை மாற்றீடு செய்தல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 அ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் பின்வரும் பிரிவானது அதற்குப்பதிலாக இடப்படுகின்றது:-

"தடைசெய்யும் கட்டளைக்கான விண்ணப்பத்திற்கான நடைமுறை

20.அ.(1) பிரிவு 2 அ என்பதன் (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவுகளின்கீழ் பிரிவு 2 ஆ என்பதன் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது பிரிவு 4 அ என்பதன் (4) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவு

களின்கீழ் கட்டளையொன்றிற்கான விண்ணப்பத்தில் தரப்பட்ட விடயங்களை உறுதிசெய்யும் சத்தியக்கடதாசி மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் மேல், செயலொன்று பிரிவு 2அ என்பதன் (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவின், பிரிவு 2ஆ என்பதன் (5) ஆம் உட்பிரிவின் அல்லது பிரிவு 4அ என்பதன் (4) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிப் புரியப்பட்டுள்ளதென நீதிவான் திருப்திப்படுமிடத்து இடைக்காலக்கட்டளை (4) ஆம் அல்லது (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நிரந்தரமாக ஆக்கப்படும் வரை அல்லது (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தள்ளுபடி செய்யப்படும்வரை அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டை கொண்டு நடாத்துவதிலிருந்து அத்தகைய ஆளை, அவரது முகவர்களை மற்றும் சேவையாளர்களை தடைசெய்கின்ற அத்தகைய இடைக்காலக்கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(3) எவ்வாளுக்கு எதிராக (2) ஆம் உட்பிரிவின்கீழ் இடைக்காலக் கட்டளையொன்று ஆக்கப்பட்டதோ அவ்வாளுக்கு அல்லது இடைக்காலக் கட்டளையொன்று (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் ஆக்கப்படாதுள்ளவிடத்து, அவ்வாளுக்கு எதிராக பிரிவு 2 அ என்பதன் (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ், பிரிவு 2(ஆ) என்பதன் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது பிரிவு 4 அ என்பதன் (4) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளைக்கான விண்ணப்பம் ஒன்று ஆக்கப்பட்டுள்ளதோ அவ்வாளுக்கு அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று (அத்தகைய அழைப்பாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு வேலை நாட்களுக்கு பிந்தாத

தேதியொன்றாகவுள்ள) தோன்றிஅத்தகைய ஆள், அவரது முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் விண்ணப்பத்தில் இறைஞ்சிக் கேட்கப்பட்டவாறு ஏன் தடைசெய்யப்படலாகாது என்பதற்கான காரணம் காட்டுமாறு அழைப்பாணை வழங்கப்படுதல் வேண்டும்.

(4) எவ்வாளுக்கு எதிராக அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதோ அவ்வாள் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றம் முன்னர் தோன்றுவதற்கு தவறியிருப்பின் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இடைக்காலக்கட்டளை ஏன் நிரந்தரம் ஆக்கப்படலாகாது என்பதை முன்வைப்பதற்கு அத்தகைய ஆள் காரணம் எதனையும் கொண்டிராதுவிடின், அப்போது நீதிமன்றம் விண்ணப்பத்தில் இறைஞ்சிக்கேட்கப்பட்ட வாறு இடைக்காலக் கட்டளையை உடனடியாக நிரந்தரமாக ஆக்குதல் வேண்டும்.

(5) எவ்வாளுக்கு எதிராக இடைக்காலக்கட்டளை ஆக்கப்படவில்லையோ அவ்வாள் மற்றும் எவ்வாளுக்கு எதிராக அழைப்பாணை (3) ஆம் உட்பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்பட்டதோ அவ்வாள் நீதிமன்றம் முன்னர் தோன்றுவதற்கு தவறியிருப்பின் அல்லது அவருக்கு எதிராக தடைசெய்தல் கட்டளை ஒன்று ஏன் ஆக்கப்படலாகாது என்பதை முன்வைப்பதற்கு அத்தகைய ஆள் காரணம் எதனையும் கொண்டிருக்கவில்லையாயின் அப்போது நீதிமன்றம் விண்ணப்பத்தில் இறைஞ்சிக் கேட்டவாறு தடைசெய்தல் கட்டளை ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(6) அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் தோன்றியிருப்பின் அத்துடன் அத்தகைய ஆள் இடைக்காலக்கட்டளை ஆக்குவதற்கு அல்லது தடைசெய்தல் கட்டளையை ஆக்குவதற்கு எதிராக

முன்வைப்பதற்கு அத்தகைய ஆள் காரணம் கொண்டிருப்பின், நீதிமன்றம் ஒன்றில் உடனடியாக வழக்கைத் தொடரலாம் அல்லது பிந்திய தேதியொன்றுக்கு விசாரணைக்காக வழக்கை நிர்ணயிக்கலாம்.

(7) அத்தகைய விசாரணையில் எந்த ஆளுக்கு (3) ஆம் உட்பிரிவின்கீழ் அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் -

(அ) காணியின் இயைபான இடப்பரப்பு இச்சட்டத்தின் பிரிவுகள் 2, 2ஆ என்பதன்கீழ் அல்லது பிரிவு 4அ என்பதன்கீழ் வருகின்றதான காணி ஒன்றாக இருக்கவில்லை என; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் பிரிவு 2 அ என்பதன் 2 ஆம் உட்பிரிவுகளின்கீழ் அல்லது பிரிவு 4அ என்பதன் (2) ஆம் உட்பிரிவின்கீழான அங்கீகாரத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகியுள் ளார் என அல்லது பிரிவு 2ஆ என்பதன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகி யுள்ளனர் என

காரணம் முன்வைப்பது தவிர (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களினுள் எதனிலும் போட்டியிடுவதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

(8) விசாரணையின் பின்னர், நீதிவான் ஒன்றில் விண்ணப்பத்தில் இறைஞ்சிக் கேட்டவாறு நிரந்தரமாக இடைக்காலக் கட்டளையை ஆக்கலாம்

அல்லது அத்தகைய இடைக்காலக்கட்டளையை தள்ளுபடி செய்யலாம் அல்லது அத்தகைய விண்ணப்பத்தில் இறைஞ்சிக் கேட்கப்பட்டவாறு தடைசெய்தல் கட்டளை ஒன்றை ஆக்கலாம் அல்லது அத்தகைய விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

(9) நீதிவான் உட்பிரிவு (4), (5) அல்லது (8) என்பதன் கீழ் கட்டளையொன்றை ஆக்கியுள்ள விடத்து நீதிவானானவர் -

(அ) (i) அத்தகைய காணிப்பரப்பளவில் முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ்சரி நிறுவப்பட்டிருக்கக்கூடியவாறான ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்தளிப்பதற்கும்;

(ii) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதற்கு அல்லது தோண்டியெடுப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு; அத்துடன்

(iii) அத்தகைய நிரப்புதலுக்கு அல்லது நிருமாணித்தலுக்கு பயன்படுத்தப்படும் ஏதேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணத்தை கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதற்கும்,

பிரதான நிறைவேற்று அலுவலரைப் பணிக்க லாம்.

(ஆ) (i) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதிலும்;

(ii) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதிலும் அல்லது தோண்டி எடுப்பதிலும் மற்றும் அகற்றுவதிலும்; அத்துடன்

(iii) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணித்தலுக்காக பயன்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகற்று வதிலும்; அத்துடன்

(iv) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப் படும் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பவற்றை கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வ திலும்,

எவ்வாளுக்கு எதிராக அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதோ அவ்வாளை உறப்பட்ட மொத்த செலவினத்தை செலுத்தும்படி பணிக்கலாம்.

(10) பட்டயம்பெற்ற சிவில் பொறியியலாளர் ஒருவரால் சான்றுபடுத்தப்பட்டதும் பிரதான நிறைவேற்று அலுவலரால் நீதிவான் நீதிமன்றத் திற்கு சத்தியக்கடதாசி ஒன்றுடன் சமர்ப்பிக்கப் படுவதுமான செலவுக் கூற்றில் குறித்துரைக்கப்பட்ட வாறு கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட செலவு இறுதியானதும் முற்றானதுமானதாதல் வேண்டும் என்பதுடன் எவ்வாளுக்கு எதிராக கட்டளை ஆக்கப்பட்டதோ அவ்வாளிடமிருந்து அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றவாறான அதேமுறையில் அறவிடப்படுதலும் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(11) (அ). ஒன்பதாம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஒன்று ஆக்கப்படுமிடத்தும் அத்துடன் நீதிவான் எவையேனும் கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணத்தை கட்டுக்காப்பில் எடுப்பதற்கு பிரதான நிறைவேற்று அலுவலரை பணித்துள்ளவிடத்தும், அத்தகைய கருவி, சாதனம், இயந்திரத் தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் அரசிற்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும் என நீதிவான் கட்டளையை ஆக்கலாம். அரசிற்கு அவ்வாறு இழப்பிக்கப்பட்ட ஏதேனும் கருவி, சாதனம், இயந்திரத்தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பன எல்லா வில்லங்கங்களிலிருந்தும் விடுபட்டு அரசிற்கு உரித்தாதல் வேண்டும். அத்தகைய உரித்தாதல் ஆனது–

(i) இழப்பித்தல் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ வினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்திற்கு செய்யப்படாதிருக்குமிடத்து, மேன்முறையீடு எந்தக் காலப்பகுதியினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது அத்தகைய மேல் நீதிமன்றத்திற்கு செய்யப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவுறுவதன் மீது பயனுறுதல் வேண்டும்; அல்லது

(ii) இழப்பித்தல் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ வின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திற்கு செய்யப்பட்டிருக்குமிடத்து இழப்பித்தல் கட்டளையினை உறுதிப் படுத்துகின்ற அல்லது போற்றிக் காக்கின்ற மேன்முறையீட்டு தீர்மானத்தின் மீது பயனுறுதல் வேண்டும்.

(ஆ) பிரதான நிறைவேற்று அலுவலர் இப்பிரிவின்கீழ் அரசிற்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் கருவியை, சாதனத்தை, இயந்திரத்தொகுதியை, வாகனத்தை அல்லது ஆவணத்தை உடைமையில் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் கருதக்கூடியவாறு அவற்றை விற்பனை செய்யலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம். அத்தகைய விற்பனை வரும்படிகள் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(12) ஒன்பதாம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஒன்று ஆக்கப்படுமிடத்தும் அத்துடன் நீதிவான் எவையேனும் கருவியை, சாதனத்தை, இயந்திரத் தொகுதியை, வாகனத்தை அல்லது ஆவணத்தை கட்டுக்காப்பில் எடுப்பதற்கு பிரதான நிறைவேற்று அலுவலரை பணித்துள்ள விடத்தும் அத்துடன் அத்தகைய கருவிகளின், சாதனங்களின், இயந்திரத் தொகுதியின் வாகனங்களின் அல்லது ஆவணங்களின் சொந்தக்காரர் மூன்றாம் திறத்தவர் ஒருவராக இருக்குமிடத்தும் தவறினைப் புரிவதற்காக-

(அ) அத்தகைய கருவியின், சாதனத்தின், இயந்திரத்தொகுதியின், வாகனத்தின் அல்லது ஆவணத்தின் பயன்பாட்டை தடுப்பதற்கான எல்லா முற்காப்புக்களையும் அவர் எடுத்துள்ளார் என; அல்லது

(ஆ) அத்தகைய கருவி, சாதனம், வாகனம் அல்லது ஆவணம் அவர் அறியாமல் பயன்படுத்தப்பட்டிருந்தது என,

நீதிமன்றத்தின் திருப்திக்கு சொந்தக்காரர் எண்பித்தால் இழப்பித்தல் கட்டளை எதுவும் ஆக்கப்படுதலாகாது.

(13) (அ) பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யப்படக்கூடிய ஏதேனும் முட்டுக்கட்டை அல்லது எதிர்ப்பு காரணமாக பின்வருவனவற்றை மேற்கொண்டு செய்வதற்கு இயலாதவராக இருக்குமிடத்து அல்லது அவர் இயலாதவராக இருப்பார் என சந்தேகிக்குமிடத்து-

(i) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதற்கும்;

(ii) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்பதில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதற்கும் அல்லது தோண்டி எடுப்பதற்கும்;

(iii) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் மண் மற்றும் எல்லா மூலப்பொருட்களை யும் அகற்றுவதற்கும்; அத்துடன்

(iv) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் எவையேனும் கருவியை, சாதனத்தை, இயந்திரத் தொகுதியை அல்லது வாகனத்தை அல்லது ஆவணத்தை கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதற்கும்.

பிரதான நிறைவேற்று அலுவலர், அவர்சார்பில் நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றை ஆக்குவதன்மேல், ஒன்பதாம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஒன்று செய்யப்படுமிடத்து பின்வருவன வற்றைச் செய்யும்படி பிசுக்காலைப் பணிக்கின்ற அந்நீதிமன்றத்தின் கட்டளைக்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

(அஅ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை இடித்து அழிப்பதற்கும்;

(அஆ) நிரப்புவதில் அல்லது நிருமாணிப்ப தில் பயன்படுத்தப்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதற்கும் அல்லது தோண்டி எடுப்பதற்கும்;

(அஇ) அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படும் மண் மற்றும் மூலப்பொருட்களை அகற்றுவதற்கும்; அத்துடன்

(அஈ) அத்தகைய நிரப்புதலுக்கு அல்லது நிருமாணிப்புக்கு பயன்படும் எவை யேனும் கருவியை, சாதனத்தை, இயந்திரத்தொகுதியை, வாகனத்தை அல்லது ஆவணத்தை கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வ தற்கும்.

(ஆ) சத்தியக் கடதாசியினால் ஆதாரப்படுத்தப் பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் முடிவான சான்றாதல் வேண்டும்.

(இ) பந்தி (அ) வின் கீழ் எப்பிசுக்காலுக்கு கட்டளை ஒன்று வழங்கப்பட்டதோ அப்பிசுக்கால் அத்தகைய கட்டளையை உடனடியாக நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை எவ் முறையில் நிறைவேற்றப்பட்டிருந்ததோ அவ் முறையில் நீதிமன்றத்திற்கு எழுத்தில் அறிக்கை யிடப்படுதலும் வேண்டும்.

(ஈ) ஏதேனும் கட்டிடம் அல்லது நிருமாணத்தை பிசுக்கால் இடித்தழித்துள்ளவிடத்து, பயன்படுத்தப் பட்ட மண் மற்றும் மூலப்பொருட்களை அகழ்ந்தெடுத்துள்ளவிடத்தும் அல்லது தோண்டி யெடுத்துள்ளவிடத்தும் அத்துடன் நிரப்புகையில் அல்லது நிருமாணத்தில் பயன்படுத்தப்பட்ட மண் மற்றும் மூலப்பொருட்களை அகற்றியுள்ளவிடத்தும் அத்துடன் அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் எவை யேனும் கருவி, சாதனம், இயந்திரத்தொகுதி, வாகனம் அல்லது ஆவணத்தை கட்டுக்காப்பில் எடுத்துக்கொள்ளுமிடத்தும் எவ்வாளுக்கு எதிராக (9) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஆக்கப்பட்டதோ அவ்வாள் அத்தகைய இடித்தளிப்பை அகழ்வதிலும் தோண்டியெடுப்பதிலும், அகற்றுவ திலும் அல்லது அத்தகைய நிரப்புகைக்காக அல்லது நிருமாணிப்புக்காக பயன்படுத்தப்படும் எவை யேனும் கருவி, சாதனம், இயந்திரத்தொகுதி, வாகனம் அல்லது ஆவணம் என்பவற்றை கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்வதிலும் உறப்படும் மொத்தச் செலவினைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அதே முறையில் அவை அறவிடப்படுதலும் வேண்டும்.

(உ) பந்தி (அ) வின் கீழ் கட்டளை ஒன்று ஆக்கப்படுமிடத்து, பிசுக்காலினால் கட்டுக்காப் பிற்கு எடுக்கப்பட்ட கருவிகள், சாதனங்கள், இயந்திரத்தொகுதி, வாகனங்கள் அல்லது ஆவணங்கள் யாவும் பந்தி (ஊ) வின் ஏற்பாடு களுக்கமைய அரசிற்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) எவையேனும் கருவிகளை, சாதனங்களை, இயந்திரத்தொகுதியை, வாகனங்களை அல்லது ஆவணங்களை கட்டுக்காப்பில் எடுப்பதற்கு (அ)

என்னும் பந்தியின்கீழான கட்டளை ஒன்று ஆக்கப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய கருவியின், சாதனத்தின், இயந்திரத் தொகுதியின், வாகனத்தின் அல்லது ஆவணத்தின் சொந்தக்காரர் மூன்றாம் திறத்தவர் ஒருவராக இருக்குமிடத்தும், தவறினைப் புரிவதற்காக-

(i) அத்தகைய கருவியின், சாதனத்தின், இயந்திரத்தொகுதியின், வாகனத்தின் அல்லது ஆவணத்தின் பயன்பாட்டை தடுப்பதற்கான எல்லா முற்காப்புக்களையும் அவர் எடுத்துள்ளார் என; அல்லது

(ii) அத்தகைய கருவி, சாதனம், வாகனம் அல்லது ஆவணம் அவர் அறியாமல் பயன்படுத்தப்பட்டிருந்தன என,

நீதிமன்றத்தின் திருப்திக்கு சொந்தக்காரர் எண்பித்தால், இழப்பித்தல் கட்டளை எதுவும் ஆக்கப்படுதலாகாது.

(14) அமைச்சர் ஒழுங்குவிதிகள் மூலம் விண்ணப்பங்களையும்மற்றும் சத்தியக் கடதாசியையும் படிவங்களில் விதித்துரைக்கலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 20ஈ மற்றும் 20உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தில் 20 இ என்னும் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 20ஈ மற்றும் 20உ என்றும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும்:-

"பொலிஸ் அலுவலர் ஒருவரால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை

20.ஈ. (1) (அ) பிரிவு 2 அ என்பதன் (5) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழும் பிரிவு 2அ என்பதன் (6) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழும் பிரிவு 2 ஆ என்பதன் (5) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழும் பிரிவு

4 அ என்பதன் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழும் அல்லது பிரிவு 4 அ என்பதன் (5) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழும் முறைப்பாடொன்று ஆக்கப்படுவதன்மேல் அத்தகைய பொலிஸ் நிலையப்பொறுப்பு அலுவலர் எவையேனும் கருவியுடன், சாதனத்துடன், இயந்திரத் தொகுதியுடன், வாகனத்துடன் அல்லது ஆவணத்துடன் சேர்த்து பிடியாணையின்றி கைதுசெய்யத்தகு தவறொன்றைப் புரிந்துள்ளவர் களான அத்தகைய தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்ட எல்லா ஆட்களையும் கட்டுக்காப்பில் எடுத்தல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றி கைதுசெய்தகு தவறொன்று எந்தத் தவறொன்றுக்காக பொலிஸ் அலுவலர் ஒருவர் பிடியாணையின்றி முதல் தடவையில் ஆளொருவரைக் கைதுசெய்யலாமோ அந்தத் தவறொன்றாதல் வேண்டும்.

(இ) இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் பிணைவழங்க முடியாததாதல் வேண்டும் என்பதுடன் 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதலும் வேண்டும்.

(2) அத்தகைய எல்லா ஆட்களும் அத்துடன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுக்காப்பில் எடுக்கப்படுகின்றதான எவையேனும் கருவிகள், சாதனங்கள், இயந்திரத்தொகுதி, வாகனங்கள் அல்லது ஆவணங்கள் யாவும் நீதிவான் நீதிமன்றம் முன்னர் உடனடியாக காண்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 2 அ என்பதன் (3) ஆம் உட்பிரிவின்கீழ், பிரிவு 2ஆ என்பதன் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது பிரிவு 4 அ என்பதன் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளொருவர் தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது அதனால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் பின்வருவனவற்றை செய்யும்படி அத்தகைய ஆளுக்கு கட்டளை இடலாம்-

(அ) அத்தகைய தவறு எந்த கட்டிடம் தொடர்பில் அல்லது நிருமாணம் தொடர்பில் புரியப்பட்டதோ அந்தக் கட்டிடத்தை அல்லது நிருமாணத்தை அழிப்பதற்கும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறு எந்த நிரப்புகையில் அல்லது நிருமாணத்தில் பயன்படுத்தப் படும் மண் அல்லது மூலப்பொருட்கள் தொடர்பில் புரியப்பட்டதோ அந்த மண், மற்றும் மூலப்பொருட்களை அகழ்வதற்கும் அல்லது தோண்டி எடுப்பதற்கும் அத்துடன் அகற்றுவதற்கும்,

(4) பிரிவு 2 அ என்பதன் (3) ஆம் உட்பிரிவின் கீழும் பிரிவு 2 ஆ என்பதன் (3) ஆம் உட்பிரிவின் கீழும் அல்லது பிரிவு (4அ) என்பதன் (3) ஆம் உட்பிரிவின்கீழும் தவறொன்றிற்கு ஆளொருவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள்.

(5) (அ) ஆளொருவர் பிரிவு 2 அ என்பதன் (3) ஆம் உட்பிரிவின்கீழும், பிரிவு 2 ஆ என்பதன் (3) ஆம் உட்பிரிவின்கீழும் அல்லது பிரிவு 4 அ என்பதன் (3) ஆம் உட்பிரிவின்கீழும் தவறொன்றைப் புரிந்துள்ளவிடத்து அத்தகைய தவறைப் புரிவதில்

அத்தகைய ஆளினால் பயன்படுத்தப்பட்ட கருவிகள், சாதனங்கள், இயந்திரத்தொகுதி, வாகனங்கள் அல்லது ஆவணங்கள் யாவும் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசிற்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) எவையேனும் கருவியின், சாதனத்தின், இயந்திரத்தொகுதியின், வாகனத்தின் அல்லது ஆவணத்தின் சொந்தக்காரர் மூன்றாம் திறத்தவர் ஒருவராக இருக்குமிடத்து தவறொன்றைப் புரிவதற்காக-

(i) அத்தகைய கருவியின், சாதனத்தின், இயந்திரத்தொகுதியின், வாகனத்தின் அல்லது ஆவணத்தின் பயன்பாட்டை தடுப்பதற்கான எல்லா முற்காப்புகளையும் அவர் எடுத்துள்ளாரென; அல்லது

(ii) அத்தகைய கருவி, சாதனம், வாகனம் அல்லது ஆவணம் அவர் அறியாமல் பயன்படுத்தப்பட்டிருந்ததென,

நீதிமன்றத்தின் திருப்திக்கு சொந்தக்காரர் எண்பித்தால் இழப்பித்தல் கட்டளை எதுவும் ஆக்கப்படுதலாகாது.

ஆட்கள் குழுவொன்றினால் அல்லது பங்காண்மை ஒன்றினால் புரியப்பட்ட தவறுகள்

20உ. இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது அவ்வாட்கள் குழு-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவராக இருப்பின்; அல்லது

(ஆ) பங்காண்மை ஒன்றாக, அத்தகைய பங்காண்மையின் பங்காளர், அலுவலர் சேவையாளர் அல்லது முகவராக இருப்பின்,

அத் தவறிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயினும், எவ்வாறாயினும், விடயத்திற்கேற்ப கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் பணிப்பாளர் ஒருவர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் அல்லது பங்காண்மை ஒன்றின் பங்காளர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் அத்தகைய தவறு அவர் அறியாமல் புரியப்பட்டது என அல்லது அவர் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமாக இருந்தவாறான உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்துள்ளார் என நீதிமன்றம் திருப்திப்படக் கூடியவகையில் அவர் எண்பித்தால் அத்தகைய தவறின் குற்றவாளியாகக் கருதப்படலாகாது".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவானது, "22அ. இச்சட்டத்தின் கீழ் எந்தத் தவறுக்குத் தண்டனை விதித்துரைக்கப்படவில்லையோ அந்தத் தவறொன்றுக்குக் குற்றவாளியான ஒருவர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "22அ. இச்சட்டத்தின் கீழ் எந்தத் தவறுக்கு தண்டம் விதித்துரைக்கப்படவில்லையோ அந்தத் தவறொன்றுக்குக் குற்றவாளியான ஒருவர், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "கூட்டுத்தாபனம்" என்னும் பதத்தின் வரைவிலக்கணத்திற்கு உடன்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன்மூலமும்–

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது, சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் எனப் பொருள்படும்; அத்துடன்

(2) "கூட்டுத்தாபனம்" என்னும் பதத்தின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன்மூலமும்:–

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 43 ஆம் அல்லது 44 ஆம் உறுப்புரையின்கீழ் எவ்வமைச்சருக்கு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் எனப் பொருள்படும்.

நிலைபெயர் கால ஏற்பாடு

**11**. இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறாத அல்லது பூர்த்திசெய்யப்படாத எல்லா வழக்குகளும், குற்றவழக்குகளும் மற்றும் வழக்குநடவடிக்கைகளும் கொண்டுநடாத்தப்படலாம் என்பதுடன் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படாதிருந்தாற்போன்று இச்சட்டம் தொடங்கும் தேதியின்பின்னர் பூர்த்திசெய்யப்படலாம்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**12**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.